பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 09 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சிக்காகோவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை இன்றளவும் ஊக்கத்தை அளித்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பிரிக்ஸ் நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

3. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு வனக்காவலர்களின் பங்கு இன்றியமையாதது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

4. ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்காவின் நவீன **Saildrone** ஆளில்லா கப்பலை ஈரான் தாக்கியதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

5. **US Open Junior** டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் — யுக்ரைனின் **Antonina Sushkova** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

சிக்காகோவில் நடைபெற்ற உலக மதங்களின் நாடாளுமன்ற மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை இன்றளவும் ஊக்கத்தை அளித்து வருவதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 1893 இதே நாளில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையை பகிர்ந்துள்ளார்.

அவரது உரை நமது நாட்டின் பாரம்பரிய கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுவதாக கூறியுள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் ஆற்றல்மிக்க வார்த்தைகள் இன்றளவும் ஊக்கம் அளிப்பதாக திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ உரை நாட்டின் ஆன்மிக பாரம்பரியத்துக்கு எடுத்துக்காட்டாக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவரது உரை, மத நல்லிணக்கம் மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக உள்ளது என்று கூறியுள்ளார்.

அவரது தொலைநோக்குப்பார்வை இளைஞர்களுக்கு ஊக்கமளிப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பிரிக்ஸ் நாடுகளின் வர்த்தகத்துறை அமைச்சர்கள் உச்சிமாநாடு இன்று புதுதில்லியில் தொடங்கியது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த வர்த்தக அமைச்சர்களும், உயரதிகாரிகளும் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் எகிப்து, எத்தியோப்பியா, இந்தோனேஷியா, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெற்றுவரும் இம்மாநாட்டில், நாடுகள் உடனான வர்த்தகம், நிலையான பொருளாதார வளர்ச்சி, எரிசக்தி பரிமாற்றத் திட்டங்கள், நிதி, பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் கலந்துரையாடல் நடைபெறுவதுடன், புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படும்.

இன்றைய உச்சிமாநாட்டில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வர்த்தக பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்திய தொழில்துறை அமைப்புகளான **FICCI, CII** மற்றும் **Assocham** அமைப்புகளின் பிரிதிநிதிகளும் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த உச்சிமாநாட்டில், தோல்விகளிலிருந்து மீண்டு எழுவது, கூட்டுறவு மற்றும் நிலைத் தன்மையுடன் கூடிய திட்டங்களை செயல்படுத்துவது என்ற கருப்பொருளின்கீழ், ஆலோசனைகளும், விவாதங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று நடைபெறும் மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே தொடர் வர்த்தக சில்லரை விற்பனை நிறுவனங்களை ஏற்படுத்துதல், நாடுகளுக்கு இடையே பில்லியன் டாலர் அளவிலான முதலீடுகளை மேற்கொள்ளுதல் என்ற அடிப்படையில் ஆலோசனைகள் இடம்பெற்றுள்ளது.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டுக்கு முன்னோட்டமாக கடந்த வாரம் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பிரிக்ஸ் நாடுகளை சேர்ந்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூட்டமைப்பு, நிதி கட்டமைப்பு உறுப்பினர்கள், கல்வி முன்னேற்றக்குழுமம், விளையாட்டு, இளையோர் மேம்பாடு, சுற்றுலா, தொலைத்தொடர்பு, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் புதுமை படைத்தல் ஆகிய துறைகளை சேர்ந்த அமைச்சர்களின் உச்சிமாநாடு புதுதில்லி மற்றும் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெற்ற மாநாட்டில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கலந்துகொண்டு உரையாற்றினார்.

உலக அளவிலான ஒட்டுமொத்த வர்த்தகத்தில் 40 சதவீத பங்கை பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் மேற்கொள்வதாக அவர் கூறினார்.

நாடுகளுக்கு இடையே பொருளாதார வலிமையை ஊக்குவிக்கும் திட்டங்களை ஒருமித்து செயல்படுத்த வேண்டும் என்றும், மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்தும் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதில், இந்தியா முக்கிய பங்காற்றி வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பொறியியல் தொடர்பான வர்த்தகமும், மின்னணு பொருட்களின் வர்த்தகமும் இந்தியாவிலிருந்து பெருமளவு மேற்கொள்ளப்பட்டு வருவதை திரு பியூஷ்கோயல் சுட்டிக்காட்டினார்.

மருந்துப்பொருட்கள் உற்பத்தியிலும் இந்தியா மிகச்சிறந்த பணியாற்றி வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், இதனை நிலைநிறுத்தும் நோக்கில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

கச்சாப் பொருட்கள் மற்றும் அரியவகை தாதுப்பொருட்களை கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே இது வர்த்தக உறவை வலுப்படுத்தும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், **20** ஆண்டுகளாக பிரிக்ஸ் அமைப்பு வெற்றிகரமாக செயல்பட்டு வருவதாக கூறினார்.

இந்த அமைப்புடன் வேறு சில நாடுகளும் இணைந்திருப்பதாகவும், நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், இந்த ஆண்டு இந்தியாவில் உச்சிமாநாடு நடைபெறுவது பெருமைமிக்கதாகும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடின், தென்னாப்பிரிக்கா தலைவர் திரு **Cyril Ramaphosa** மற்றும் உகாண்டாவின் துணைத்தலைவர் **Jessica Alupo** புதுதில்லி வந்தடைந்தனர்.

நைஜீரியா, உருகுவே, லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளை சேர்ந்த வெளியுறவுத்துறை அமைச்சர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<>>>>>

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினத்தையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மொழியின் ஆற்றலை போற்றிய பாரதியாரின் சொற்கள் காலம் கடந்தும் நம் மனங்களில் அதே வீரியத்துடன் ஒலித்துக் கொண்டிருக்கும் என்று கூறியுள்ளார்.

தேசப்பற்று, சமத்துவம், பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றை தமது கவிதைகளால் எடுத்துரைத்த மகாகவி பாரதியாரின் நினைவை போற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.

திரு அமித் ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நவீன தமிழ் இலக்கியத்தின் தந்தையான பாரதியார் தனது கவிதைகள் மூலம் நமது விடுதலை இயக்கத்திற்கு தேசபக்தி உணர்வை ஊட்டியவர் என்று தெரிவித்துள்ளார்.

பாலின சமத்துவம், ஆன்மீக ஞானம் மற்றும் சமூக நீதிக்கான பாதையை காட்டியவர் அவர் என்று திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தேசத்தின் சுதந்திரமும், முன்னேற்றமும் மக்களின் ஒற்றுமையிலிருந்து பிறக்கும் என்பதை ஆழமாக நம்பியவர் பாரதியார் என்று தெரிவித்துள்ளார்.

சாதி வேறுபாடுகளை கடந்த சமூக ஒற்றுமை, பெண் விடுதலை, சமத்துவம் மற்றும் தேசிய உணர்வு ஆகியவற்றை தனது கவிதைகளில் வலியுறுத்தியவர் பாரதியார் என்று அவர் கூறியுள்ளார்.

அவரது லட்சியங்களையும், தேப்பற்றையும் போற்றி, அவரது நினைவை வணங்குவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு வனக்காவலர்களின் பங்கு இன்றியமையாதது என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

தேசிய வனக்காவலர் தியாகிகள் தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பல்லுயிர் பெருக்கத்திற்கு வனம் மற்றும் வனவிலங்குகளை பாதுகாக்க இன்னுயிர் ஈந்தவர்களை நினைவு கூர்வதாக தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கழகம், **CSIR** பல்கலைக்கழக மானிய குழுவுடன் இணைந்து நடத்திய தேசிய தகுதி தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியுள்ளது.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற இந்த தகுதி தேர்வின் முடிவுகள் இன்று வெளியிடப்பட்டதாக தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

தேர்வு முடிவுகள் குறித்த தகவல்கள் [www.nta.ac.in](http://www.nta.ac.in) என்ற இணையதளத்தில் தெரிந்துக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்காவின் நவீன **Saildrone** ஆளில்லா கப்பலை ஈரான் தாக்கியதாக அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, ஈரான் ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹோர்முஸ் நீரிணையில் அனைத்து கப்பல் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

இந்த நீரிணை ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும், எதிரி நாடுகளின் கப்பல்களை ஈரான் தாக்கும் என்றும் ஈரான் ராணுவம் எச்சரித்துள்ளது.

இதனிடையே, அமெரிக்கா ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஹோர்முஸ்

நீரிணையில் இந்தக் கப்பலுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

**US Open Junior** டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மாயா ராஜேஸ்வரன் — யுக்ரைனின் **Antonina Sushkova** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-4, 6-4** என்ற செட் கணக்கில், ரஷ்யாவின் **Felitsata — Pushkareva** இணையை வென்றது.

-------------

இந்தோனேஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரன்சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **7-5, 6-1** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Hayden Jones**-ஐ வென்றார்.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் **Dig Vijay Pratap Singh**-கும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-18 என்ற செட் கணக்கில், சீன தைபே-யின் Huang Ching Ping—ஐ வென்றார்.**

**----------------**

**ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜப்பானை எதிர்கொள்கிறது**

**ஜப்பானில் இப்போட்டி மாலை 4 மணிக்கு தொடங்குகிறது.**

**<<<<<END>>>>>**